பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 11 2025 FRIDAY 7.15 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு கிடைத்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) பீகார் சட்டப்பேரவை தேர்தல் தோல்விக்கான காரணங்களை காங்கிரஸ் ஆராய வேண்டியது அவசியம் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சசி தரூர் தெரிவித்துள்ளார்.

3) அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

4) பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 24 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்..

5) உலக அமெச்சூர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 111 தொகுதிகளில் வெற்றிபெற்று, 87 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி 61 தொகுதிகளில் வெற்றிபெற்று, 29 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 41 தொகுதிகளில் வெற்றி பெற்று 43 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள LJP 8 தொகுதியில் வெற்றிபெற்று 11 தொகுதிகளிலும், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 4 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கிறது

இந்த தேர்தலில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் 8 தொகுதிகளில் வெற்றிபெற்று, 17 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 5 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.

இந்த தேர்தல் வெற்றியை, பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதா தள் கட்சியினர் கொண்டாடி வருகின்றனர்.

பாட்னாவில் அக்கட்சிகளின் தலைமையகங்களில் இனிப்புகள் வழங்கியும், வாத்தியங்களை இசைத்தும், பட்டாசுகளை வெடித்தும் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.

தில்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் தற்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பிஜேபி தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலைமையகத்திற்கு வந்தபோது, அக்கட்சி தொண்டர்கள் மலர்தூவியும் வெற்றி கோஷங்களை எழுப்பியும் அவரை வரவேற்றனர்.

(சவுண்ட் பைட் - கோஷம் 16 செகண்ட்ஸ்)

>>>><<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலோடு, ஆறு மாநிலங்கள் மற்றும் ஜம்மு கஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட எட்டு சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் மற்றும் பிஜேபி தலா 2 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

ஆம் ஆத்மி, PDP, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மற்றும் மிஸோ தேசிய முன்னணி தலா ஒரு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

தெலங்கானாவின் ஜூப்ளிஹில்ஸ் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. நவீன் யாதவ், தமக்கு அடுத்தபடியாக வந்த BRS வேட்பாளர் திருமதி. சுனிதா கோபிநாத்தை விட 24ஆயிரத்து 929 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

ராஜஸ்தானின் ANTA சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளர் திரு. பிரமோத் ஜெயின் பையா, பிஜேபி வேட்பாளரைவிட 15 ஆயிரத்து 612 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

பஞ்சாபின் Tarn Taran சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளர் திரு. Harmit Singh Sandu 12 ஆயிரத்து 91 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஜம்மு கஷ்மீரின் Nagrota சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் திருமதி. தேவ்யானி ரானா 24 ஆயிரத்து 647 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

Budgam தொகுதியில் PDP வேட்பாளர் திரு. Aga Syed Muntazir Mehbi 4 ஆயிரத்து 478 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

மிஸோரத்தின் Dampa தொகுதியில் மிஸோ தேசிய முன்னணி வேட்பாளர் டாக்டர் Lalthangliana 562 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஒடிசாவின் Nuapada தொகுதியில், பிஜேபி வேட்பாளர் திரு. Jay Dholakia, தமக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் வேட்பாளரை விட 83 ஆயிரத்திற்கும் கூடுதலாக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஜார்க்கண்டின Ghatsila தொகுதியில் JMM வேட்பாளர் திரு. Chandra Soren 38 ஆயிரத்திற்கும் கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தல் வெற்றி, நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் சமூகநீதிக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றி, பீகாரின் வளர்ச்சிக்காக கூடுதல் உத்வேகத்துடன் பணியாற்றுவதற்கான சக்தியை அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற பிஜேபி வேட்பாளர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றியை அளித்ததற்காக ஒடிசா மற்றும் ஜம்மு கஷ்மீர் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>><<<<

பீகாரின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்படுத்திய திட்டங்களே, சட்டப்பேரவை தேர்தல் வெற்றிக்கு காரணம் என்று மத்திய இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

பாட்னாவில் எமது செய்தியாளரிடம் தெரிவித்த அவர். மகளிர் மற்றும் இளையோர் பிரதமர் மீது வைத்துள்ள நம்பிக்கையை இந்த வெற்றி உணர்த்துவதாக கூறினார்.

>>>><<<<

தேர்தல் தோல்விக்கான காரணங்களை காங்கிரஸ் ஆராய வேண்டியது அவசியம் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சசி தரூர் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகாரைப் பொறுத்தவரை கூட்டணிக்கு தலைமை வகித்த ராஷ்ட்ரிய ஜனதா தளமும் தோல்விக்கான காரணங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிரச்சாரம் மேற்கொள்ள தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் திரு. சசி தரூர் கூறினார்.

>>>><<<<

உத்தரபிரதேசம், தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் இதுவரை 91 சதவீத விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 13 கோடியே 74 லட்சம் வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேற்குவங்கத்தில் 7 கோடியே 40 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று விசாகப்பட்டினத்தில் இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

புத்தொழில் துறையின் முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.*

>>>><<<<

*விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 21வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 19ஆம் தேதி விடுவிக்கிறார்.*

*இந்த திட்டத்தின் மூலம் இதுவரை 3 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*11 கோடிக்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்து வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>><<<<

*குஜராத்தில் ராஜ்கோட் – போர்பந்தர் இடையேயான சிறப்பு ரயில் சேவையை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*ராஜ்கோட் ரயில் நிலையத்தில் நடைபெற்ற விழாவில் பேசிய அவர், சௌராஷ்ட்ரா மண்டலத்தின் வளர்ச்சிக்கு இந்த ரயில் சேவை மேலும் உத்வேகம் அளிக்கும் என்று கூறினார்.*

>>>><<<<

*அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*

*இன்று விசாகப்பட்டினத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நியூஸிலாந்து, ஓமன், பெரு, சிலி மற்றும் ஐரோப்பிய யூனியனுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.*

*தொழில் வளர்ச்சிக்கு இந்த ஒப்பந்தங்கள் அவசியமாகிறது என்றும் அமைச்சர் கூறினார்.*

>>>><<<<

*தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு, உத்தரபிரதேச அமைச்சரவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*இன்று லக்னோவில் அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*கோழைத்தனமான இதுபோன்ற தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஓய்வூதியம் உள்ளிட்ட 20 பரிந்துரைகளுக்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக உத்தரபிரதேச அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

>>>><<<<

*பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 24 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

*Bajaur, Kohat மற்றும் Karak மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர், தீவிரவாதிகளுக்கு எதிராக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

>>>><<<<

*உலக அமெச்சூர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*செர்பியாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில், Ansu Pathak வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் Disha வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

>>>><<<<